60

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNE5247/ESE5147– உள்ளடங்கல் வகுப்பறையில் சிறுவர்களின் பிரச்சினைகளைக் கையாளுதல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.02.2025 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

---

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளைச் செயற்படுத்தும்போது இலங்கையில் உள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) முக்கிய தடைகளை அடையாளம் கண்டு விளக்குக.
2. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கான உள்ளடங்கற் கல்வியில் பெற்றோர் ஈடுபாட்டின் **இரண்டு** (02) நன்மைகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.
3. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படுவதைத் தடுக்கப் பாடசாலைகள் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) உத்திகளைப் பட்டியலிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.
4. இயலாமையின் மருத்துவ மற்றும் சமூக மாதிரிகளை வேறுபடுத்துக.
5. பல்வகைமையுள்ள மாணவர்களின் கற்றற் தேவைகளை நிவர்த்தி செய்வதில் ஒரு ஆசிரியரின் பல்முகப்படுத்தப்பட்ட வகிபாகத்தின் பங்கை விளக்குக.
6. "பல்துறை சார் வாண்மையாளர்கள் குழு" (Multidisciplinary team) என்ற எண்ணக்கருவை வரையறுத்து, அதில் உள்ளடக்கப்படக்கூடிய **மூன்று** (03) முக்கிய வாண்மையாளர்களைக் குறிப்பிடுக.
7. ஒரு உள்ளடங்கற் கல்வியாளர் கொண்டிருக்க வேண்டிய **ஐந்து** (05) நற்குணாம்சங்களைக் குறிப்பிடுக.
8. இயலாமைகள் உள்ள மாணவர்களை மிகக் குறைந்த கட்டுப்பாட்டு சூழலில் வைப்பதன் **மூன்று** (03) குறிப்பிடத்தக்க நன்மைகளைப் பட்டியலிடுக. மேலும் இந்த உள்ளடங்கல் அணுகுமுறையைத் திறம்பட செயற்படுத்த முயற்சிக்கும் போது பாடசாலைகள் எதிர்கொள்ளும் **இரண்டு** (02) முக்கிய சவால்களை ஆராய்க.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. "வளர்முக நாடுகளில் இயலாமைக் உள்ள குழந்தைகளின் கல்விக்குப் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை".

 **i.** வளர்முக நாடுகளில் இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கான கல்விக்கு முன்னுரிமை அளிப்பதைத் தடுக்கும் **ஐந்து** (05) காரணிகளைப் பட்டியலிடுக.

**(05 புள்ளிகள்)**

 **ii.** இயலாமைகள் உள்ள குழந்தைகளின் கல்வி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய நீண்ட கால விளைவுகளைப் பற்றி ஆராய்க.

**(06 புள்ளிகள்)**



119

**iii.** இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கான தரமான கல்விக்கான அணுகலை மேம்படுத்த அரசாங்கம் செயற்படுத்தக்கூடிய **மூன்று** (03) உத்திகளைக் குறிப்பிட்டு அவற்றை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**10. i.** விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் கல்வியில் பெற்றோர்கள் ஈடுபடக்கூடிய மூன்று (03) வழிகளைப் பட்டியலிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக

**(03 புள்ளிகள்)**

**ii.** பெற்றோரின் மனப்பாங்கும் உணர்வுகளும் இயலாமைகள் உள்ள குழந்தைகளின் வெற்றியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களைப் பயன்படுத்தி விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** "பெற்றோர் உதவிக் குழுக்கள் பரஸ்பர கற்றல் மற்றும் அனுபவங்களைப் பகிர்வதற்கு ஒரு சிறப்பான தளமாகும்."

இக்கூற்றைப் பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

**11.** "பொதுக் கல்வி ஆசிரியர்களை விட விசேட கல்வி ஆசிரியர்கள் அதிக அறிவு, திறன் மற்றும் மனப்பான்மை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்."

**i.** பொதுக்கல்வி ஆசிரியர்களுடன் ஒப்பிடும் போது விசேட கல்வி ஆசிரியர்கள் எவ்வகையான விசேட அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும்?

**(05 புள்ளிகள்)**

**ii.** **முன்று** (03) எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விசேட கல்வி ஆசிரியர்களின் மனப்பாங்கின் முக்கியத்துவத்தையும், அம்மனப்பாங்கு இயலாமைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றற் சூழலை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** விசேட கல்வி ஆசிரியர்களுக்கான தொழில்முறை மேம்பாட்டுத் திட்டத்தை வடிவமைக்க உங்களுக்கு வாய்ப்பு இருப்பதாகக் கருதுங்கள். அவர்களின் திறன்களை மேம்படுத்த திட்டத்தில் எவ்வகையான பகுதிகள் சேர்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**(09 புள்ளிகள்)**

**12. i.** உள்ளடங்கற் கல்வியை செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் பாடசாலை மட்டத்திலான **ஐந்து** (05) சவால்களைப் பட்டியலிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii.** சகபாடிகளின் மனப்பான்மையும் ஆதரவும் உள்ளடங்கலின் வெற்றிக்குப் பெரிதும் பங்களிக்கின்றன. இந்தக்கூற்றை **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கலின் வெற்றியை மேம்படுத்தப் பாடசாலை மட்டத்தில் இயலாமைகள் உள்ள மாணவர்களிடம் சகபாடிகளின் நேர்மறையான மனப்பாங்கை ஊக்குவிக்க **நான்கு** (04) வழிகளைப் பரிந்துரைக்குக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** விசேட தேவைகள் உள்ள மாணவர்களுக்கான ஒரு தனியாள் மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் (IEP) கொண்டிருக்க வேண்டிய **ஐந்து** (05) முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் இயலாமைகளுள்ள மாணவர்களுக்கான IEP களை உருவாக்கும் போது ஏற்படக்கூடிய **மூன்று (03)** சவால்களை மேற்கோள் காட்டி விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** மேலே குறிப்பிடப்பட்டுள்ள சவால்களைச் சமாளிக்கப் பரிந்துரைகளை முன்மொழிக.

**(08 புள்ளிகள்)**

**14. i.** விசேட தேவைகள் உள்ள மாணவர்களால் வெளிப்படுத்தப்படும் **ஐந்து** (05) பொதுவான சவால்மிக்க நடத்தைகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** மேலே குறிப்பிட்ட **இரண்டு** (02) நடத்தை சார் சிக்கல்களைத் தேர்ந்தெடுத்து, வகுப்பறையில் அத்தகைய நடத்தைகளை நிர்வகிக்க நீங்கள் பயன்படுத்தும் உத்திகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** நடத்தை சார் பிரச்சினைகள் உள்ள சிறுவர்களின் சவாலான நடத்தைகளை திறம்பட நிர்வகிப்பதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் துணை ஊழியர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



121